## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 165/2019 | Date : 17.11.2023 | PW1 |
|---|---|---|
| Name: மாரியப்பன் | S/o. **மயில்சாமி** | |
| Evidence Recorded Time: 12.56 P.M. to 01.05 P.M | | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் செண்டரிங் வேலை செய்து வருகிறேன். நான் செய்யும் வேலை கூலி தொழில் என்றால் சரிதான். ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளம் என்றால் ரூ.900 அல்லது ரூ.1000/- கிடைக்கும். வேலை இல்லை என்றால் அன்றைய தினம் சம்பளம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி வேலையின் மூலம் வரும் வருமானத்தை தவிர வேறு வருமானம் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா என்ன வேலை செய்து வருகிறார் என்றால் என் அப்பா மின் வாரியத்தில் மின் கம்பிவட ஆய்வாளராக வேலை செய்து பணி ஓய்வு பெற்றுவிட்டார். எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால் 2023-ம் ஆண்டு 6ம் மாதம் பணி ஓய்வு பெற்றார். எனக்கு சொந்தமாக விவசாயம் நிலம் உள்ளதா என்றால் உள்ளது. என்ன கிராமத்தில் என்ன சர்வே எண்ணில் நிலம் உள்ளது என்றால் கோனூர் கிராமம், சர்வே எண் நினைவில்லை. எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 2.50 ஏக்கர் நிலம் உள்ளது. எனக்கு தற்போது என்ன வயதாகிறது என்றால் 44 வயதாகிறது. 1ம் பிரதிவாதி மகேந்திரனுக்கு என்னை விட 10 வயது கூடுதலாக இருக்கும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் பழக்கவழக்கம் மூலம் தெரியும், உறவினர், நண்பர் அல்ல. 1ம் பிரதிவாதியை எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் கடந்த 10 வருடங்களாக தெரியும். 1ம் பிரதிவாதி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் சொந்தமாக தொழில் செய்து வருகிறார். என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. எனக்கு 1ம் பிரதிவாதியின் தந்தை மற்றும் சகோதரரை தெரியும். அவரின் அண்ணன் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த சொத்திற்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் இரண்டு அல்லது மூன்று கி.மீ துாரம் இருக்கும். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பூர்வீக சொத்தாகும். 1ம்

பிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பாகப்பிரிவினை மூலம் வந்த பூர்வீக நிலமாகும். அவ்வாறு எவ்வளவு நிலம் வந்தது என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்.721/3 ஆகும். மேற்படி சர்வே எண்ணில் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 25 செண்ட் நிலம் மகேந்திரனுக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தை கிரைய ஒப்பந்தம் போட்ட தேதியிலோ, கிரைய தேதியிலோ, கிரையத்திற்கு பின்னிட்டு நாளது வரை நிலஅளவையர், கிராம நிர்வாக அலுவலர் மூலம் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. முறையாக நிலத்தை அளவீடு செய்யாமல்தான் சுவாதீனம் எடுத்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்ணிலேயே வடக்கு பக்கம் இந்த 1ம் பிரதிவாதிக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரருக்கும் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.